I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.112/2019

| | | |
|---|---|---|
| **Name** | : | Karthikeyan |
| **Father/Husband Name** | : | V. Chokkalingam |
| **Age** | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.01.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 03.05. p.m.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் சென்னையில் வசிக்கிறேன். நான் 2021 லிருந்து 2025 வரை சென்னையில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுயைட முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் போட்டேன் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை. அதில் சென்னை விலாசம் இல்லை என்றால் நினைவில்லை. என்னுயைட முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன விலாசம் போட்டுப்பட்டுள்ளது என்றால் குடியாத்தம் விலாசம் போடப்பட்டுள்ளது.

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் போட்ட தேதியில் நான் குடியாத்தில் வசிக்வில்லை என்றால் நான் 2021 ல் சென்னையில் இருந்தேன் ஆனால் முதல் விசாரணை போடப்பட்டுள்ள தேதியில் குடியாத்தத்தில் அல்லது சென்னையில் வசித்தேனா என்று நினைவில்லை. என்னுடைய வயது 40. இந்த வழக்கு 2019 ல்

போடப்பட்டுள்ளது. என் தாவாவில் என் வயது 39 என்று போடப்பட்டிருந்தால் அது தவறா என்றால் ஆமாம்.

பிரதிவாதி எந்த தேதியில் வந்து என்னிடம் பணம் கேட்டார் என்று நினைவில்லை. அவர் பணம் கேட்கும் போது யார் முன்னிலையில் கேட்டார் யார் யாருடன் வந்து கேட்டார் என்று சொல்ல முடியுமா என்றால் என் வீட்டில் வந்து என் அப்பா முன்னிலையில் கேட்டார்.

முதன் முதலில் எந்த தேதியில் வந்து பணம்கேட்டார் என்று நினைவில்லை. அவர் பணம் வாங்குவதற்கு முன்பாக இந்த தேதியில் வந்து பணம் வாங்கிகொள்ளுங்கள் என்ற சொன்னேன். ஆனால் அந்த தேதி நினைவில்லை. 25 ஆம் தேதி அன்று நான் வர சொல்லியிருந்தேன். அதற்கு ஒரு வாரம் முன்பு நான் பணம் தருவதாக கூறினேன்.

25 ஆம் தேதி எந்த மாதம் எந்த தேதி என்ன கிழமை என்றால் 4 வது மாதம் ஆனால் என்ன கிழுமை என்று நினைவில்லை. பணம் நான் கையில் தான் வைத்திருந்தேன். நான் பணம் கையில் வைத்திருந்தேன் என்பதற்கு ஏதாவது ஆதாரம் நீதிமன்றத்தில் போட்டுள்ளேனா என்றால் நான் கையில் சேமிப்பாகதான் வைத்திருந்தேன். எனவே ஆதாரம் தாக்கல் செய்யவில்லை.

ஒருவர் சேமிப்பாக பணம் வைத்திருக்க வேண்டும் என்றால் ஏதாவது வியாபாரம் அல்லது உத்தியோகம் செய்தால் தான் பணம்கையில் வைத்திருக்க முடியும் என்றால் சரிதான். நான் உத்தியோகம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2000 ல் தான் படித்து முடித்தேன். நான் வியாபாரம் செய்கிறேன் என்ற விவரத்தை என் தாவாவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுப்பதற்கு எந்தவித போதிய வருமானம் எனக்கு இல்லை என்று பிரதிவாதி அவர்கள்

வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பிலும் , தாவாவில்தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் சொல்லியுள்ளார் என்றாலும் எனவே எனக்கு கடன் கொடுப்பதற்கு வசதி உள்ளது என்பதை நான் நிருபிக்க கடமைப்பட்டவர் என்றாலும் நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். நான் விஐடி கல்லூரிக்கு முன்பாக Boys hostel வைத்து நடத்தி கொண்டிருந்தேன்.

நான் அவ்வாறு Boys hostel வைத்து நடத்தி கொண்டிருந்தேன் என்பதற்கும் அதில்போதிய வருமானம் வந்தது என்று காண்பிப்பதற்கும் ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.என் பெயரில் ஏதாவது கட்டிடமும் இல்லை.

Boys hostel நடத்துவதாக சொல்லப்பட்ட கட்டிடம் என் அப்பா பெயரில் உள்ளது. அவர் பெயரில் அக்ரிமென்ட் போட்டுதான் வியாபாரம் செய்தேனா என்றால் அக்ரிமென்ட் போடவில்லை. என் தந்தை சொத்து என்பதால் மேற்படி கட்டிடத்தில் வரும் அனைத்து வருமானமும் என் அப்பாவின் வருமான கணக்கில் தான் வருகிறது என்றால் சரிதான் என்னுடைய பெயரிலும் IT யில் காட்டி தாக்கல் செய்கிறேன். என்னுடைய பெயரில் IT யில் மேற்படி கட்டிடத்தில் வரும் வாடகை வருமானம் என்று IT யில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். நான் அவ்வாறு IT யில் காட்டவில்லை என்றாலும் நான் என் சொந்த கட்டிடத்தில் வாடகை வருவதாகவும் தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

எனக்கு போதிய வருமானம் வந்தால் வங்கியில் தான் போடுவேன். அவ்வாறு வங்கியில் போட்டிருந்தால் அந்த வங்கி கணக்கை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. வரும் வருமானத்தை Gudiyatham ல் Andra bank and Axis Bank ல் தான் போடுவேன். வருமானம்

நான் கையில் தான் வைத்திருப்பேன் ஆனால் வங்கி கணக்க உள்ளது.

எதிரி என்ன அறிவிப்பு கொடுத்தார் அல்லது அதில் என்ன பதில் கொடுத்தார் என்று படித்து பாரத்தேன். அதில் என்ன சொல்லியுள்ளார் என்றால் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் பாண்டும் பொய் என்றும் சொல்லியுள்ளார். பதில் அறிவிப்பில் எனக்கு பணம் கொடுக்க சக்தி இல்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். இவ்வாறு அவர் சொல்லியுள்ளதை பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்திலாவது நான் இன்ன வியாபாரம் செய்கிறேன் ,எவ்வளவு வருமானம் வருகிறது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

அதற்கான தஸ்தா வேஜுனல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 25.04.2018 ல் நான் பணம் வாங்கி கொள்ளும் படி கூறினனேன் அவரும் அந்த தேதியிலேயே வந்து வாங்கிகொண்டார்.

அன்றைக்கு காலை 10.00 லிருந்து 11.00 குள் பாண்டை தியாகராஜனே கொண்டு வந்தார். தியாகராஜனை அழைத்து கொண்டு ஜெயசங்கர் வந்தார். தியாகராஜன் யார் என்று ஜெயசங்கருக்கு தெரியாது என்றால் நான் அன்று தான் அவரை முதன் முறையாக பார்த்தேன். அவர் எந்த ஊர் என்ற தெரியாது. பத்திரம் எழுதும்போது தியாகராஜன் யார் என்றும் எந்த ஊர் என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் நான் கேட்கவிலலை என் அப்பா கேட்டார். யார் பாண்டு எழுதுவதற்கு சொன்னது என்றால் நான் சொன்னது என்று சொல்லவிட்டு உடனடியாக ஜெயசங்கர் என்று கூறினார்.

ஜெயசங்கர் சொல்லிதான் எழுதினார் அவர் எனன் இங்கில் எழு தினார் என்று நினைவில்லை. நான் எத்தனை மணிக்கு பணம்

கொடுத்தேன் என்றால் 11.10 மணிக்கு இருக்கும். முதலில் பாண்டு எழுதிவிட்டு பணம் கொடுக்கப்பட்டதா அல்லது பணம் கொடுத்தப்பிறகு பாண்டு எழுதப்பட்டதா என்றால் பாண்டு எழுதியபிறகு தான் பணம் கொடுக்கப்பட்டது. எல்லாம் ரூ–500 ருபாய் நோட்டுக்கள்.

அதில் யார் முதல் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் மனோகர். அவர் எந்த இங்கில் கையெழுத்து போட்டார் என்று நினைவில்லை தமிழீல் தான் கையெழுத்து போட்டார். அவருக்கு அடுத்து முருகேசன் கையெழுதது போட்டார். அவர் தமிழில் போட்டாரா ஆங்கிலத்தில் போட்டாரா என்று நினைவில்லை மேலும் எந்த இங்கில் போட்டார் என்றும் நனைவில்லை. பணம் கொடுப்பத்றகு முன்பாகவே சாட்சி யையெழுத்து போட்டார்களா என்றால் ஆம். முருகேசன் மற்றும் மனோகர் என்பவர்கள் என் அப்பாவுடன் பணி செய்தவர்களா என்றால் மனோகர் என் உறவினர். முருகேசன் அப்பாவிடம் வேலை செய்தவர்.

நான் தியாகராஜன், முருகேசன் மற்றும் மனோகர் ஆகியோர்கள் கூட்டுச்சேர்ந்து திட்டமிட்டு பிரதிவாதியை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக என் அப்பாவின் அறிவுறுத்தலின் படி இந்த A பாண்டை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு A பாண்டு படி எந்த பணமும் பட்டுவாடா செய்யவில்லை என்றாலும் எதிரி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றாலும் பாண்டு எதுவும் எழுதப்படவில்லை என்றாலும் பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்றாலும் இதன் முன்னிலைக்கு எந்த பணமும் பிரதிவாதி கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் வழக்கிற்கான வியாஜிய மூலம் இல்லை எதுவும் என்றாலும் சரியல்ல.

2018–2019 ல் என்னுடைய IT யில் ரூ. 3,00,000/– தான் எனக்கு வருட வருமானம் என்று போட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் நிலையில் நான் ரூ–5,00,000/– கடன் கொடுத்ததாக சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல. ஜெயசங்கருக்கும் எனக்கும் எந்தவித நேரடி தொடர்பு இல்லை என்றால் சரியல்ல 40 வருடமாக என் அப்பாவிற்கு நெருங்கிய நண்பர் என்பதால் எனக்கு தெரியும்.

என் அப்பாவிற்கும் பிரதிவாதிக்கு கடந்த 10 ஆண்டுகளாக நட்பு முறிவு ஏற்பட்டு விரோதமாக உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த் மூன்விரோதம் காரணமாகதான் நான் என் தந்தையுடன் கூட்டுசதியாக செயல்பட்டு இந்த தாவா Ex.A1 (A பாண்டை ) தயாரித்துள்ளோம் என்றால் தவறு. அதில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளையும் பத்திரம் எழுதியவரையும் இன்று வரையிலும் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல அவர்தான் என்னை அழைத்து வந்தார்.

நான் உண்மையில் பாண்டு எழுதப்பட்டிருந்தால் எந்த இங்கினால் யார் யார் வந்து கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்க தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மனோகரன் முதல் சாட்சியாக A பாண்டில் கையெழுத்து போடவில்லை என்றால் தெரியாம கூட சொல்லியிருக்கலாம். இவ்வளவு நாட்கள் ஆகிவட்டதால் யார் முதலில் போட்டார்கள் இரண்டாவது போட்டார்கள் என்று மறந்திருக்கலாம்.

இந்த பாண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வரை என்னுடைய கஸ்டடி யில் தான் இருந்தது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் எனக்கு எந்த இங்கினால் எழுப்பட்டது யார் யார் முதல் சாட்சி கையெழுத்து

போட்டார்கள் என்றும் யார் யார் எந்த மொழியில் கையெழுத்து போட்டார்கள் என்றும் தெரியாது என்று சொல்வது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பதாக உள்ளது என்றால் தவறு.

2 வதாக பணம் கொடுத்தாக சொல்லப்படுவது எந்த தேதியில் என்றால் 04.06.2018. என்றைக்கு வந்து பணம் கேட்டார் என்றால் சுமார் 2 நாட்கள் முன்பாக கேட்டார், அவர் தொழிலை மேம்படுத்துவதற்காக கேட்டார்.

அவர் தொழிலுக்கு எந்தவிதமான கடன் கோர அவசியமில்லை என்றால் தவறு. Ex.A2–அந்த B பாண்டு யார் எழுதியது என்றால் கோபி மற்றும் முருகன் ஆவர். இந்த பாண்டையும் ஜெயசங்கர் சொல்லிதான் எழுதப்பட்டது. கோபி என்பவர் யார் என்று தெரியாது. முருகன் என் அப்பாவுடன் வேலை பார்த்தவர்.

கோபி என்பவரும் முருகன் என்பவரும் ஜெயசங்கருக்கு யார் என்றே தெரியாது என்றால் தவறு. அன்றும் பாண்டு எழுதிய பிறகு சாட்சிகன் கையெழுத்து போட்ட பிறகு தான் பணம் கொடுத்தேன். நான் அன்றைக்கும் கொடுக்கப்பட்டது 500 ரூபாய் நோட்டுகள்தான் சுமார் 11.30 மணி இருக்கும். அதுவும் எங்கள் வீட்டில் முதல் அறையிலிருந்து கொடுக்கப்பட்டது. அதற்கும் 2 நாட்கள் முன்பு கேட்டார்.

நான் சொல்வது போல் மேற்படி பாண்டுகள் அனைத்தும் காலை 10.00 லிருந்து 11.00 க்குள் கொடுக்கபட்டதாக சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட சங்கதியாகும் என்றால் தவறு.

காலை 11.30 மணிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் B பாண்டு (ஏற்கனவே கேட்டுள்ளதாக வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை

தெரிவித்தார்) அனைத்தும் தயாரிக்கப்ட்ட சங்கதிகள் என்றால் தவறு.

அந்த B பாண்டு எந்த இங்கினால் எழுதப்பட்டது என்றும் சாட்சிகள் எந்த இங்கினால் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றும் எந்த மொழியில் கையெழுத்து போட்டார்கள் என்றும் எனக்கு நினைவில்லை.

இதில்எதற்காக கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் பாண்டில் எழுதப்படவில்லை. Ex.A2 – B பாண்டில் உள்ள சங்கதிகள் மற்றும் சாட்சிகள் எழுதியவர்கள் விவரம் யாவையும் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் என் அப்பா பிரதிவாதி மேல் கொண்டுள்ள விரோதத்தினால் தயாரிக்கப்பட்ட பாண்டு என்றும் அதன் முன்னிலைக்கு தாங்கள் பணம் வசூல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் தவறு. இந்த பாண்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் வியாஜியமூலம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் தவறு.

ஏற்கனவே கொடுத்த ExA1– A பாண்டு 4 வது மாதம் கொடுக்கப்பட்டது. அதன் பறகு வட்டி ஒரு வருடம் கொடுத்தார். அவ்வாறு 1 வருடம் வட்டி கொடுத்த விவரத்ததை நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசலே திருப்பி கொடுக்காத பட்சத்தில் 2 வது கடன் எப்படி கொடுக்க முடியும் என்றாலும் எனவே அதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்றாலும் தவறு. இதிலிருந்து அந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்று தெரிகிறது என்றால் தவறு.

2 வது பாண்டு ( Ex.A2) எழுதியதாக சொல்லப்படுவதில் சாட்சிகள் முதலில் யார் போட்டார்கள் என்றால் தெரியாது என்று உடனடியாகவே நினைவில்லை என்று கூறினார், மீண்டும் சாட்சி நினைவில்லை என்று தான் கூறினேன் என்று தெளிவுப்படுத்தினார்.

Ex.A 3– C பாண்டு யார் எழுதினார் என்றால் அருண்குமார். சாட்சி

கையெழுத்து கோபி மற்.றும் முருகனும் போட்டார்கள். அது எந்த தேதியல் எழுதினார்கள் என்றால் 06.06.2018. முருகன் என் அப்பாவுடன் வேலை செய்தவர் கோபி எனக்கு தெரியாது. முதல் சாட்சி கையெழுத்து போட்டது யார் மற்றும் இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்டது யார் என்று நினைவில்லை. பிரதிவாதிக்கு முருகன் மற்றும் கோபி என்பவர்கள் தெரியாது என்று சொல்கிறார் என்றால் தவறு.

முருகன் என் அப்பாவுடன் வேலை செய்தவர். கோபி என் உறவினர். அருண்குமார் எனக்கு தெரியாது. அருண்குமார் பிரதிவாதிக்கு யார் என்று தெரியாது என்று சொல்கிறார் என்றால் தவறு. அருண்குமார் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. கோபி குடியாத்தம். முருகன் குடியாத்தம் ஆனால் எந்த பகுதி என்று தெரியாது.

C பாண்டு எழுதும்போது கூட சாட்சிகள் எல்லாம் கையழுத்து போட்ட பிறகு தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். சாட்சிகள் எழுதியவர் அனைவரும் எந்த மொழியில் , எந்த இங்கில் கையெழுத்து போட்டார்கள் என்று கூட தெரியாது என்றால் சரிதான். அது காலை 11.00 மணிக்குள் கொடுத்தேன். எல்லாம் 500 ரூபாய் நோட்டுக்கள்.

எத்தனை 500 ரூபாய் கொடுத்தேன் என்றால் 2 கட்டு கொடுத்தேன். ஒவ்வொரு கட்டிலும் 100 நோட்டுகள். மொத்தமாக 10 கட்டு. ரூ.2,50,000 மற்றும் ரூ.2,50,000 ஆக அதாவது 5 கட்டுகள் கொண்ட 2 பண்டல்கள். அதை நான் வீட்டின் முன்னால் அறையில் வைத்து தான் கொடுத்தேன்.

எப்போது பணம் கேட்டார் என்று நினைவில்லை. நான் சொல்வது போல் அனைத்து பாண்டுகளும் தயாரிக்கப்பட்டவை என்று சொல்வது தவறு. அந்த c பாண்டு எந்த இங்கினால் எழுதப்பட்டது என்று நினைவில்லை. எதற்கான கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் பாண்டில்

எழுதப்படவில்லை. ExA3– C பாண்டில் உள்ள சங்கதிகள் சாட்சிகள் எழுதியர் விவரம், ஆகிய அனைத்தும் பிரதிவாதிக்கு தெரியாது என்றுலும் அவ்வாறு சங்கதிகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் பாண்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் அதன் முன்னிலைக்கு பணம் வசூல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்று சொல்வதும் தவறு.

இந்த பாண்டு தயாரிக்கப்பட்டது என்பதாலும் இந்த வழக்கிறகு வியாஜியமூலம் இ,ல்லை என்று சொல்வதும் தவறு. இந்த பாண்டிற்கு பவ்வளவு நாள் வட்டி கொடுத்தார் என்று நினைவில்லை.

அவ்வாறு வட்டி கொடுத்ததே நினைவில்லாத பட்சத்தில் 3 வது பாண்டுக்கு பணம் கொடுக்க சாத்திய கூறுகள் இல்லை என்று சொன்னால் தவறு. ஒரு பாண்டு எழுதினால் அதற்கு தவறாமல் வட்டி கொடுத்து வந்தால் தான் மீண்டும் அவருக்கு கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

அவ்வாறு இருக்கும் பட்சத்தில் A பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார், B பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார், C பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார், என்ற விவரம் நினைவில்லை வீட்டில் கணக்கு உள்ளது.

ஆனால் பணம் கொடுத்தார் என்றால் சரிதான். ஒவ்வொரு மாதமும் எவ்வளவு கொடுத்தார் என்று நினைவில்லை. கணக்கை நான்தான் வைத்திருக்கிறேன். வழக்கு போடும் போது அந்த விவரத்தை நீதிமன்றத்தில் சொல்லவில்லை.

தோராயமாக A பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார், B பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார், C பாண்டிற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று கேட்டால் நினைவில்லை. பிரதி மாதம் ஒவ்வொரு பாணட்டிற்கும் வட்டி எவ்வளவு கொடுத்தார் என்றால் நினைவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள ஒவ்வொரு பாண்டுகளுக்கும் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்றால் நினைவில்லை. என்னால் குறிப்பாக எவ்வளவு மாதத்திற்கு வட்டி கொடுத்தார் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.

Ex.A4– D பாண்டு எழுதியது யார் என்றால் அருண்குமார். அதில் சாட்சி கையெழுத்து போட்டது விஜயன் மற்றும் பூபதி ஆவர். விஜயன் என் உறவினர். பூபதி என் அப்பாவுடன் வேலை செய்தவர். அந்த பாண்டு ஜெயசங்கர் கூறி எழுதப்பட்டது. ஜெயசங்கருக்கு எழுதியது யார் என்று தெரியாது என்றாலும் விஜயனும் பூபதியும் யார் என்று தெரியாது என்றாலும் தவறு.

அன்றைக்கும் பாண்டு எழுதிய பிறகு சாட்சிகள் சாட்சி கையெழுத்து போட்ட பிறகு தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைக்கும் 500 ரூபாய் நோட்டு தான் கொடுத்தேன். அந்த பாண்டு எந்த தேதியில் எழுதினார்கள் என்றால் 11.06.2018.

அன்றைக்கு என்ன கிழமை என்று நினைவில்லை. எழுதியுள்ள 5 பாண்டுகளும் எந்தெந்த கிழமையில் எழுதினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். அதுவும் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் தான் எழுதினார்கள். பணம் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று நினைவில்லை.

அந்த பாண்டு எந்த இங்கினால் எழுதப்பட்டது என்று நினைவில்லை. சாட்சிகள் எந்த இங்கினால் கையெழுத்து போட்டார்கள் என்று நினைவில்லை. அதில் எந்த சாட்சிகள் முதலில் கையெழுத்து போட்டார் என்று சொல்ல முடியுமா முடியாதா என்றால் நினைவில்லை.

அவர் எந்த மொழியில் கையெழுத்து போட்டார்கள் என்றால் நினைவில்லை. கடன் எதற்காக வாங்கப்பட்டது என்று பாண்டில்

எழுதப்படவில்லை. ExA4- D பாண்டில் உள்ள சங்கதிகள், சாட்சிகள் ,எழுதியவர் விவரம் யாரையும் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும்ள ன் அப்பா பிரதிவாதி மீது கொண்டுள்ள விரோதத்தினால் தயாரிக்கப்பட்ட பாண்டுகள் என்றாலும் அதன் முன்னிலைக்கு தாங்கள் பணம் வசூல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் தவறு. இந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்றாலும் இதற்கு வியாஜியமூலம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் தவறு.

இந்த பாண்டிற்கு எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்று நினைவில்லை ஆனால் வட்டி கொடுத்தார் கணக்க பார்த்தால் தான் தெரியும். இந்த விவரத்தையும் என் தாவாவில் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம்.

அசலே திருப்பி கொடுக்காத பட்சத்தில் 4 வது முறையாக பணம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்றாலும் அதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்றாலும் இதிலிருந்தே இந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்று சொல்வது சரியல்ல.

Ex.A5- E பாண்டு எழுதியது யார் என்றால் அருண்குமார். அதில் சாட்சி கையெழுத்து போட்டது விஜயன் மற்றும் பூபதி ஆவர்.விஜயன் என் உறவினர். பூபதி என் அப்பாவுடன் வேலை செய்தவர். அந்த பாண்டு ஜெயசங்கர் கூறி எழுதப்பட்டது. ஜெயசங்கருக்கு எழுதியது யார் என்று தெரியாது என்றாலும் விஜயனும் பூபதியும் யார் என்று தெரியாது என்றாலும் தவறு.

அன்றைக்கும் பாண்டு எழுதிய பிறகு சாட்சிகள் சாட்சி கையெழுத்து போட்ட பிறகு தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைக்கும் 500 ரூபாய் நோட்டு தான் கொடுத்தேன். அந்த பாண்டு எந்த தேதியில்

எழுதினார்கள் என்றால் 20.06.2018.

அன்றைக்கு என்ன கிழமை என்று நினைவில்லை. எழுதியுள்ள 5 பாண்டுகளும் எந்தெந்த கிழமையில் எழுதினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். அதுவும் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் தான் எழுதினார்கள். பணம் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று நினைவில்லை.

அந்த பாண்டு எந்த இங்கினால் எழுதப்பட்டது என்று நினைவில்லை. சாட்சிகள் எந்த இங்கினால் கையெழுத்து போட்டார்கள் என்று நினைவில்லை. அதில் எந்த சாட்சிகள் முதலில் கையெழுத்து போட்வர் யார் மற்றும் இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்டவர் யார் என்றால் நினைவில்லை.

அவர் எந்த மொழியில் கையெழுத்து போட்டார்கள் என்றால் நினைவில்லை. கடன் எதற்காக வாங்கப்பட்டது என்று பாண்டில் எழுதப்படவில்லை. ExA5– E பாண்டில் உள்ள சங்கதிகள், சாட்சிகள் ,எழுதியவர் விவரம் யாரையும் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் என் அப்பா பிரதிவாதி மீது கொண்டுள்ள விரோதத்தினால் தயாரிக்கப்பட்ட பாண்டுகள் என்றாலும் அதன் முன்னிலைக்கு தாங்கள் பணம் வசூல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் தவறு. இந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்றாலும் இதற்கு வியாஜியமூலம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் தவறு.

இந்த பாண்டிற்கு எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்று நினைவில்லை ஆனால் வட்டி கொடுத்தார் கணக்கு பார்த்தால் தான் தெரியும். இந்த விவரத்தையும் என் தாவாவில் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம்.

அசலே திருப்பி கொடுக்காத பட்சத்தில் 5 வது முறையாக பணம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்றாலும் அதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்றாலும் இதிலிருந்தே இந்த பாண்டு தயாரிக்கப்பட்ட பாண்டு என்று சொல்வது சரியல்ல.

மேற்படி Ex.A1 to A5 பாண்டுகள் அனைத்தும் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதத்திற்குள் கொடுக்கபட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. 2 மாதத்திலே மொத்த பணமும் கொடுப்பதற்கு என்க்கு சக்தி இருந்தது என்பதற்கு வங்கி கணக்கு அல்லது எங்கிருந்து வந்தது என்ற விவரத்தையும் என்னுடைய தாவாவிலோ முதல் பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு பாண்டிற்கே பணம் திருப்பி கொடுக்காத பட்சத்தில் 5 பாண்டுகள் ஏற்பட சாத்திய கூறுகள் இல்லை என்று சொன்னல் தவறு .

இந்த 5 பாண்டுகளுக்கும் வியாஜியமூலம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் அவை அனைத்தும் உறவினர்களால் தயாரிக்கப்பட்டவை என்றாலும் பணமே கொடுக்காத பட்சத்தில் பாண்டே எழுதவில்லை என்று மறுக்கும் பட்சத்தில் பிரதிவாதி எந்த கடனும் செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் தவறு.

பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பிய பிறகு பதில் அறிவிப்பில் தாவா பாண்டுகள் அனைத்தின் xerox நகலையும் , நான் எழுதி கொடுக்காத பட்சத்தினால் அவற்றை பார்வையிட கோரினார் என்றால் சரிதான். நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அப்படி ஒரு பதில் கொடுத்தற்கு அவர் என்னை ஏமாற்றுகிறார் என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் இலலை.

பாண்டில் நான் கையெழுத்தே போடவில்லை என்று பிரதிவாதி கூறியுள்ள நிலையில் அந்த பாண்டுகளை தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்ப முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை( வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்வியே எழாது என்றும் யார் மோசடி செய்து தயார் செய்யப்பட்டது என்று சொல்கிறாரோ அவர்தான் நிருபிக்க வேண்டும் என்றும் எனவே இந்த கேள்வி வராது என்றும் ஆட்சேபணை தெரிவித்தார். அது வாதத்தில் பேசி கொள்ளலாம் என்பதாலும் கேள்வி பதிவு செய்வதை தவிர்க்க இயலாது என்பதாலும் பதிவு செய்யப்படுகிறது )

எனக்கு 2018 வருடத்தில் மொத்த வருமானமே ரூ.3,00,000/– என்றால் சரிதான். அந்த ரூ. 3,00,000 என் அப்பாவின் கட்டிடத்தில் இருநது வந்த வாடகை என்று சொல்வது தவறு.

2019 ல் என் மொத்த வருமானமே ரூ.3,50,000 என்றால் சரிதான்.

2020 ல் என் மொத்த வருமானமே ரூ.3,00,000 என்றால் சரிதான். நான் ஒவ்வோரு வருடமும் வருமான வரி கட்டி கொண்டுதான் உள்ளேன். வருமான வரி என்பது தான் ஈட்டிய பணம் கொடுத்த பணம் அனைத்தையும் காட்டப்பட வேண்டும் என்றால் சரிதான். இந்த ரூ.25,00,000 வருமான வரியில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல காட்டியுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம்–என்னுடைய வருமான வரி கணக்கா என்றால் சரிதான். 2018–2019,2019–2020,2020–2021 வருமான வரிக்கான கணக்கு பி.வா.சா. 1 முதல் 3 ஆகும். என்னுடைய வருமாண வரி கணக்கிலிருந்தே மேற்படி கடனை கொடுக்க வசதி இல்லை என்று தெரிகிறது என்றால் தவறு.

என் அப்பா எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பூந்தமல்லி நீதிமன்றத்தில் பிரதிவாதி மீது வரியவர்(Insolvent) என்று தாவா போட்டள்ளாரா என்றால் தெரியாது. என் அப்பா பிரதிவாதி என்ன என்ன வழக்குகள் போட்டுள்ளார் என்றால் தெரியாது.

என் தாயார் பிரதிவாதி மீது ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகதான் இருக்கிறோம் என்றால் சரிதான். நான் சென்னையில் வசிக்கிறேன். என் குடும்பத்திலேயே பிரதிவாதி மீது என்ன என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியாது என்று சொல்வது ஏமாற்றுவதற்காக சொல்லும் செயல் என்றால் தவறு.

எனக்கு அனைத்து விஷயமும் தெரியும் என்றாலும் என்னுடைய குடும்பத்தில் என்ன என்ன வழக்குகள் உள்ளது என்று தெரியும் என்றாலும் இங்கு பொய் சொல்கிறேன் என்றாலும் தவறு.

நான், என் அம்மா , அப்பா அனைவரும் சேர்ந்து சதி திட்டம் தீட்டி பிரதிவாதி மீது பாண்டுகளை தயாரித்து வாங்காத கடனுக்கு கடன் பெற்றதாக கூறி பிரதிவாதி மீது பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் தவறு. என் அப்பாவிடம் ஜெயசங்கர் கையெழுத்து போட்ட பத்திரங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் வட்டி கொடுத்ததாக சொல்லப்படும் புதிய சங்கதியும் என்றாலும் இந்த வழக்கிற்கான வியாஜிய மூலம் அதற்காக ஏற்படவில்லை என்றாலும் தவறு.

பிரதிவாதி எந்த பணத்தையும் கொடுக்க தேவையில்லை என்றும் அவர் கடனே வாங்காத பட்சத்தில் பாண்டுகளை பொய்யாக தயாரித்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் இவ்வழக்கை compensatory cost

உடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

பாண்டுகளில் உள்ள அனைத்து சாட்சிகளும் என்னால் உருவாக்கப்பட்டவை என்றாலும் பாண்டு எழுதியவர் யாரும் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 05.40 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.